**O.S. 179/2020**

Date :02.07.2025

பி.சா.1. : பட்டுராஜா

பி.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு வாதிக்கு நான் சொந்தக்காரர் என்றால் இல்லை. நான் வழக்கு வாதிக்கு உறவினர் என்றாலும், பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 2017 ம் வருடம் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி வழக்கு வாதி தபசில் இடத்தில் உள்ள சீமை கருவேல மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினார் என்றால் சரியல்ல. நான்தான் வெட்டினேன். அது சம்பந்தமாக சியாமலா என்பவர் வாதி மற்றும் என் பெயரிலும், மூன்றடைப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் நானும், வாதியும் காவல் நிலையத்தில் ஆஜரானோம் என்றால் நான் ஆஜராகி என் பத்திரத்தை காண்பித்தேன். வாக்குமூலம் வாங்கி முடித்து விட்டார்கள். நானும், வாதியும் சேர்ந்துதான் ஆஜரானோம் என்றால் சரியல்ல. அப்போதுதான் வழக்கு சொத்தின் பட்டா கண்ணையா என்பவர் பெயரில் உள்ளது தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த பட்டாவை பார்த்த பிறகுதான் வழக்கு சொத்தை பொறுத்து போலியான ஆவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த யோகபத்துவை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அவருக்கும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன். யோகத்துவை விசாரித்தால்தான் அவர்கள் எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுத்தார் என்பது தெரிய வரும் என்றால் சரியல்ல. அந்த யோகபத்துவை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1992 முதல் 2002 வரை சவுந்திரபாண்டியன் என்பவர் ஆழ்வார்நேரி சர்ச்சில் பாதர் ஆக இருந்தார் என்றால் சரியல்ல. ஒவ்வொரு சர்ச்சிலும் திருமண பதிவேடு இருக்கும் என்றால் தெரியாது. அதேபோல் ஒவ்வொரு சர்ச்சிலும் ஞானஸ்தான பதிவேடு இருக்கும் என்றால் தெரியாது. . ஒவ்வொரு சர்ச்சிலும் ஞானஸ்தானம் மற்றும் திருமண பதிவேடு இருப்பது எனக்கு தெரியும் என்றும் தெரியாது என நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒவ்வொரு சர்ச்சிலும் சர்ச்சிற்கு உட்பட்ட பகுதியில் உள்ளவர்களுக்கு திருமணத்தை குருவானவர் நடத்தி வைத்து பதிவேட்டில் பதிவு செய்வார் என்றால் தெரியாது. 2003 முதல் 2020 வரையில் வாதி

சி.,எம்.எஸ்.நடுநிலையில் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தால் என்றால் சரியல்ல. 12.06.1993 ல் கண்ணையா என்பவர் சவுந்திரபாண்டியன் பெயருக்கு வழக்கு சொத்தை பொறுத்து தான செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் கண்ணையா என்பவர் ஊரில் இல்லை. அன்றைய தேதியில் இருந்து வழக்கு சொத்து சவுந்திரபாண்டியன் அனுபவத்திலும் அவரை தொடர்ந்து வாதியின் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. ஆழ்வார்நேரியில் உள்ள திருமண பதிவேடையும், ஞானஸ்தான பதிவேட்டையும் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வாதி கோரியபடி வாதிக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.